**முனைவர் தே.தேன்மொழி**
**உதவிப்பேராசிரியர்**
**வேல்ஸ் பகலைக்கழகம்**
**பல்லாவரம், சென்னை-117**
**செல் : 8610928727**

# பாரதியும் கல்விச்சிந்தனையும்

**முன்னுரை**

மகாகவி பாரதியாரது பரந்த பார்வையில் குழந்தைகள் நலனுடனும் சிறப்புடனும் எவ்வாறு வளர்க்கப்பட வேண்டும், அவர்களது அறிவுத்திறன் சிறப்புற பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் பொறுப்பு என்ன? என்பதை அவரது ஆழ்மன சிந்தனையில் உதித்த அவரது எண்ணங்களை தனது படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார். முதலில் குழந்தைகளுக்கு நல்ல கல்வியை அளிப்பதினால், கற்றுத்தேர்ந்த குழந்தைகள் நல்லறிவு பெற்றவர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் திகழ்வார்கள். சமுதாயமும் சீர்பெறும். இக்கருத்தை நிலைநிறுத்த பாரதி, இச்சமுதாயத்தில் விதைக்க நினைத்த சமுதாயச் சீர்திருத்தத்தையும் கல்விச் சிந்தனைகளையும் குறித்து ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மகாகவி பாரதி**

தமிழன்னையின் தவப்புதல்வர் மகாகவி பாரதி. ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த பின் வாராது வந்த மாமணி அவர். அடிமைப்பட்ட நாட்டில் பிறந்திருந்தாலும், சுதந்திரத்துக்காக ஏங்கிய அவரது உள்ளத்தில் கனன்ற தேசபக்தியும், சமுதாய உணர்வும், தாய்மொழிப் பற்றும், அற்புதமான படைப்புகளாக மாறி, இன்றும் நமக்கு வழிகாட்டுகின்றன. ஒரு நாட்டின் உயர்வுக்கு கல்வியே அடிப்படை என்ற எண்ணம் மிகுந்தவரான பாரதி, தமிழ்நாட்டைப் பற்றிய பெருமிதம் தொனிக்கும் வகையில்,

**கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு – நல்லபல்விதமாயின சாத்திரத்தின் – மணம் பாரெங்கும் வீசுந் தமிழ்நாடு வள்ளுவன் தன்னை உலகினுக்கே – தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு – நெஞ்சைஅள்ளும் சிலப்பதி காரமென்றோர் – மணி யாரம் படைத்த தமிழ்நாடு** (தேசிய கீதங்கள் – செந்தமிழ்நாடு: 5-6)

என்று பாடி மகிழ்ந்தவர். தமிழ் மட்டுமல்லாது, சமஸ்கிருதம், ஆங்கிலம், ஹிந்தி, வங்கம், பிரெஞ்சு மொழிகளும் அறிந்தவர் அவர். எனவே தான் அவரால்,

**யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்;**

**இனிதாவது எங்கும் காணோம்**, (தேசிய கீதங்கள் – தமிழ்: 1) என்று பாட முடிந்தது. அதே வேளையில், தனது காலத்தில் நாட்டில் நிலவிய அறியாமை, அடிமைத்தனம், கல்வியில் பின்தங்கிய நிலை குறித்த கவலைகளும் இருந்தன. சொல்லப்போனால், கல்வியறிவு குறைந்ததே நமது அடிமைத்தனத்திற்குக் காரணம் என்ற எண்ணத்தையே கொண்டிருந்தார் பாரதி.**கல்வி**

சுவாமி விவேகானந்தர்,

"**மனிதனில் ஏற்கனவே இருக்கின்ற பூரணத்துவத்தை**

**வெளிப்படுத்துவது தான் கல்வி**" (ஞான தீபம்- 9.240) என்ற வரிகளில், கல்வி என்பது வெளியிலிருந்து மூளைக்குள் திணிப்பதல்ல; மனிதனிடம் ஏற்கனவே இருக்கும் அறிவை மேம்படுத்துவது தான் கல்வி. அக்கல்வி, மனிதனின் முழுமையை மேலும் சிறக்கச் செய்வதாக இருக்க வேண்டும் என்கிறார். 1330 குறட்பாக்களில் உலகம் புகழும் நூலை அளித்த திருவள்ளுவர், கல்வி, கல்லாமை என்ற இரு அதிகாரங்களில், இருபது குறட்பாக்களில் கல்வியின் சிறப்பை விளக்குகிறார்.

**கற்க கசடற கற்பவை கற்றபின்**

**நிற்க அதற்குத் தக**. (திருக்குறள்- 391)என்ற கல்விக்கான அவரது குறளில், "கற்கத் தகுதியான நூல்களை சந்தேகம் அற்ற வகையில் கற்க வேண்டும்; அவ்வாறு கற்ற பின் அதற்குத் தகுந்தவாறு நடக்கவும் வேண்டும்" என்பது வள்ளுவர் வாய்மொழி. அது மட்டுமல்ல, "எண்களும் (கணிதமும்) எழுத்துகளும் (மொழி) ஆகிய இரண்டுமே மக்களின் இரு கண்கள் போன்றவை" என்றும் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். இத்தகைய கல்வியின் சிறப்பினை உணர்ந்தவர் பாரதி. கல்வியினால் மக்களுக்கு ஏற்படும் அறிவு வளர்ச்சியை எடுத்துரைத்தவர்; மேலும் சமுதாய முன்னேற்றத்திற்கு அறிவியல் நோக்கு மிகவும் தேவை என்பதையும் அறிந்தவர். இவற்றை அவரது பாடல்கள் மூலம் அறிந்து கொள்ள முடியும். கல்விபெற வாய்ப்பில்லாத மக்களின் நிலைகண்டு பாரதியார் வருந்துகிறார். சத்திரம், கோயில் முதலியவை கட்டுதலைவிட ஏழைக்குக் கல்வி புகட்டுதல் மேலானது என்கிறார்.அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்; ஆல யம்பதி னாயிரம் நாட்டல்;அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்குஎழுத்தறி வித்தல் (வெள்ளைத்தாமரை - 9) என்கிறார்.

மக்களிடையே நிலவும் தேவையற்ற அச்சத்தையும், பொருளற்ற மூடநம்பிக்கைகளையும் தகர்க்க, அறிவியல் நோக்கும் அறிவியல் நுட்ப அறிவும் தேவை என்பதை உணர்த்துகிறார் பாரதியார். எனவே வெளிநாட்டினரின் அறிவியல் நுட்பங்களைப் பற்றிக் கூறும் நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்க வேண்டும் என்றும், புதிய அறிவியல் நுட்பங்களைக் கூறும் நூல்களை நாமே படைக்க வேண்டும் என்றும் அவர் வேண்டுகின்றார். 'பாரத தேசம்' என்ற தனது லட்சியம் தெறிக்கும் பாடலில், கல்விச் சாலைகள் வைப்போம் என்று முழங்குகிறார் பாரதி. எதிர்காலத்தில் நமது தாய்நாடு எவ்வாறு சிகரத்தை எட்டப் போகிறது என்பதை மனக்கண்ணால் பார்த்து,

**ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்**
**ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்**
**ஓயுதல் செய்யோம் தலை சாயுதல் செய்யோம்**
**உண்மைகள் சொல்வோம் பல வண்மைகள் செய்வோம்.** (தேசிய கீதங்கள்- பாரத தேசம்: 9) என்று கவிதை வடித்த பாரதியின் வைர வரிகள் இவை: கல்விக்கடவுளான கலைவாணியைத் தொழும் பாடலிலும் கூட, கல்விச்சாலைகள் நிறுவுவதே தலையாய கடமை என்று நினைவுறுத்துகிறார் பாரதி. அடிமை மக்களுக்கு கல்வி புகட்ட ஆதிக்க அரசு நினையாது என்பதை உணர்ந்த சமுதாயக் கவிஞரான பாரதி, ஊர்தோறும் வசதியானவர்கள் கல்விச்சாலைகளை நிறுவ வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

**வீடு தோறும் கலையின் விளக்கம்,**
**வீதி தோறும் இரண்டொரு பள்ளி;**
**நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்**
**நகர்க ளெங்கும் பலபல பள்ளி;**
**தேடு கல்வியி லாததொ ரூரைத்**
**தீயி னுக்கிரை யாக மடுத்தல்**
**கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை**
**கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்.** (பக்திப் பாடல்கள்- வெள்ளைத் தாமரை: 6)என்று கல்வி பயிற்றுவிக்கும் பள்ளியில்லாத ஊரைத் தீயீட்டு எரிப்போம் என்று கூறும் அளவிற்கு பாரதியின் வேகம் மிகுந்திருப்பதை இப்பாடலில் நாம் காண்கிறோம். மேலும்,

"ஆண், பெண், அடங்கலாக நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இனாம் படிப்புக் கட்டாயமாய்ச் சொல்லி வைக்க வேண்டும். இது ராஜாங்கத்தாருடைய கடமை. ஆனால் நம்முடைய ராஜாங்கத்தார் இப்போதுள்ள நிலைமையில் அவர்கள் இந்தக் காரியம் செய்ய மாட்டார்கள்.நமக்கு நல்ல காலம் எப்போது வருமோ தெய்வத்துக்குத்தான் தெரியும். அதுவரை அதிகாரிகள் எப்படியிருந்த போதிலும், அதைப் பொருட்டாக்காமல் நாட்டிலுள்ள பணக்காரர் மற்றெல்லாவித தர்மங்களைக் காட்டிலும், ஜனங்களுக்கு அறிவு விருத்தியும், தைரியமும், தேச பக்தியும் உண்டாக்கத் தகுந்த சுதேசியக் கல்வி ஏற்படுத்திக் கொடுப்பதைப் பெரிய தர்மமாகக் கருதி, அதிலே பணம் செலவிட முற்படும்படி மேற்படி பணக்காரருக்கு நல்ல புத்தி ஏற்படுத்திக் கொடுக்குமாறு தெய்வத்தை வேண்டுகிறோம்." (குழந்தைகள்- சுதேசமித்திரன் 25.10.1917 கட்டுரை). என்று குறிப்பிட்டுள்ளார்.

**குழந்தைக் கல்வி**

மனிதனின் நாற்றங்கால் பருவமான மழலைப் பருவத்திலேயே விதைப்பது முக்கியம் என்றும் அவர் கருதி இருக்கிறார். எனவே தான், குழந்தைகள் பாடி மகிழும் விதமாக 'பாப்பா பாட்டு' எழுதியபோதும் கூட, அதிலும் கல்வியின் முக்கியத்துவத்தை விதைக்கிறார் பாரதி.

**காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு**
**கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு!**
**மாலை முழுதும் விளையாட்டு – என்று**
**வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா**! (பாப்பா பாட்டு: 6) என்ற வரிகள் மூலம், கல்வியானது இனிமையானதாக இருக்க வேண்டும்; விளையாட்டும் பாட்டும் கூடியதாக, களிப்பூட்டக்கூடியதாக இருக்க வேண்டும் என்ற அவரது தாபம் இப்பாடலில் வெளிப்படுகிறது. குழந்தைகளுக்கு கல்வி கற்றுக் கொடுக்கும் பாதையில் பெண்களின் பங்களிப்பு மிக முக்கியம் என்ற கருத்தை,

**"தமிழ் நாட்டு ஸ்திரிகளையும் சேர்த்துக் கொண்டு அவர்களுடைய யோசனைகளையும் தழுவி நடத்தாவிடில் அக்கல்வி சுதேசியமாகமாட்டாது. தமிழ்க் கல்விக்கும், தமிழ்க் கலைகளுக்கும் , தொழில்களுக்கும் தமிழ் ஸ்திரீகளே விளக்குகளாவர். தமிழ்க் கோவில், தமிழரசு, தமிழ்க்கவிதை, தமிழ்த் தொழில் முதலியவற்றுக்கெல்லாம் துணையாகவும் தூண்டுதலாகவும் நிற்பது தமிழ் மாதரன்றோ? ஒரு**

**பெரிய சர்வகலா சங்கத்தின் ஆட்சி மண்டலத்தில் கலந்து தொழில் செய்யத் தக்க கல்விப் பயிற்சியும் லௌகீக ஞானம் உடைய…. பத்துப் பெண்களைக் கூட்டி நடத்த வேண்டிய காரியங்களைப் பச்சைத் தமிழில் அவர்களிடம் கூறினான். அதனின்றும் அவர்கள் பயன்தரத்தக்க பல உதவி யோசனைகளும், ஆண்மக்கள் புத்திக்குப் புலப்பட வழியில்லாத புதுக் குணங்களும், சமைத்துக் கொடுப்பார்களென்பதில் சந்தேகமில்லை"** (காலவரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள் – 9:2008 : 58-59) இவ்வரிகளின் வழியாக பாரதியார் முன்வைக்கின்றார்.

**அடிப்படைக் கல்வி**

தேச மொழியில் ஞானமும், தமிழ் நூல்களில் தேர்ச்சியும், நல்ல ஆரோக்கியமும் உடையவர்களே ஆசிரியர்களாக அமைதல் வேண்டும் என்ற அவரது முன்னோக்கான பார்வை வியக்கத்தக்கது. கற்றார்க்கு எவ்விடத்தும் சிறப்புண்டு. எனவே கல்விக்கான வசதி எப்படிச் செய்வது? பாரதியாரே அதைத் திறம்படச் சொல்கிறார். இதனை,**"உங்களுடைய கிராமத்தில் ஒரு பாடசாலை ஏற்படுத்துங்கள். அல்லது பெரிய கிராமமாக இருந்தால் இரண்டு மூன்று வீதிகளுக்கு ஒரு பள்ளிக்கூடம் வீதமாக எத்தனை பள்ளிக்கூடங்கள் சாத்தியமோ அத்தனை ஸ்தாபனம் செய்யுங்கள். ஆரம்பத்தில் மூன்று உபாத்தியாயர்கள் வைத்துக் கொண்டு ஆரம்பித்தால் போதும். இந்த உபாத்தியாயங்களுக்குத் தேச பாஷையில் நல்ல ஞானம் இருக்க வேண்டும். திருஷ்டாந்தமாக இங்ஙனம் தமிழ் நாட்டில் ஏற்படும் தேசிய பாடசாலைகளில் உபாத்தியராக வருவோர் திருக்குறள், நாலடியார் முதலிய நூல்களிலாவது தகுந்த பழக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும். சிறந்த ஸ்வதேசாபிமானமும், ஸ்வதர்மாபிமானமும் எல்லா ஜீவர்களிடத்தும் கருணையும் உடைய உபாத்தியாயர்களைத் தெரிந்தெடுத்தல் நன்று"** (பாரதியார் கட்டுரைகள், 2004 : 176) என்றும்,"**அங்ஙனம் தேசபக்தி முதலிய உயர்ந்த குணங்கள் ஏற்கனவே அமைந்திராத உபாத்திரயாயர்கள் கிடைத்த போதிலும், பாடசாலை ஏற்படுத்தும் தலைவர்கள் அந்த உபாத்தியாயர்களுக்கு அந்தக் குணங்களைப் புகட்டுவதற்குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஆரோக்கியமுந் திடசரீரமுடைய உபாத்தியாயர்களைத் தேர்ந்தெடுப்பது நன்று**" (பாரதியார் கட்டுரைகள் : 2004 : 383)என்றும், கூறிய பாரதியார் தான் வாழ்ந்த காலத்தில் எழுதிய கருத்துக்கள் இன்றும் ஏற்புடையனவாய் உள்ளன என்பதே வியப்பிற்குரியது.

**பள்ளிக்கல்வி**

மாணவர்களுக்குக் கல்வி நிலையங்களில் கற்பிக்க வேண்டிய பாடங்கள் பற்றிய விரிவுபட்ட பாரதியின் ஞானம் வியக்கத் தக்கதாக உள்ளது. அவர் கட்டுரை, கதைகளிலே உலகளாவிய உன்னதப் படைப்புகளைப் படைத்தவர். குழந்தைகளின் பாடங்கள் பற்றிய அவரது கருத்துக்கள் அவர் ஒரு படைப்பாளி மட்டுமல்ல. மிகச்சிறந்த கல்வியாளர் என்பதைக் காட்டுகின்றன. இன்றளவும் ஆசிரியர்கள், பயிற்சியாளர்கள், கல்வி அமைச்சர்கள் இவர் கூறுவதை அறிந்து செயல்பட்டால் நலம் பயக்கும். இதனை,"**ஆதி பால்ய பிராயத்தில் மனதில் பதிக்கப்படும் சித்திரங்களே எக்காலமும் நீடித்திநிற்கும் இயல்புடையவை. ஆதலால் பள்ளிப் பிள்ளைகளுக்கு ஆரம்ப வகுப்பிலேயே நம்முடைய புராதன சரித்திரத்தின் அற்புதமான பகுதிகளைய10ட்டி அசோகன், விக்கிரமாதித்தன், ராமன், லஷ்மணன், தர்ம புத்திரன், அர்ஜுனன் இவர்களிடமிருந்த சிறந்த குணங்களையும் அவற்றால் அவர்களுக்கும், அவர்களுடைய குடிகளுக்கும் ஏற்பட்ட மகிமைகளையும் பிள்ளைகளின் மனத்தில் பதியும்படி செய்வது அந்தப் பிள்ளைகளின் இயல்பைச் சீர்திருந்த மேன்மைப்படுத்துவதற்கு நல்ல ஸ்தானமாகும்**" (பாரதியார் கட்டுரைகள், 2004 : 384) என்றும்,"**ஹிந்து தேச சரித்திரம் மாத்திரமேயல்லாது ஸௌகரியப்பட்டால் இயன்றவரை அரேபிய, பாரசீக, ஜரிஷ், போலிஷ், குஷ்ப, எகிப்திய ஜப்பானிய துருக்க தேசங்கள் முதலியவற்றின் சரித்திரங்களிலும், சில முக்கியமான கதைகளும் திருஷ்டாந்தங்களும் பயிற்றிக் கொடுக்க ஏற்பாடு செய்தல் நல்லது**" (பாரதியார் கட்டுரைகள், 2004 : 384)என்ற கருத்துக்களில் மாணவர்களுக்கு வகுப்பறைகளில் புராணக்கதைகளில் கூறப்பட்ட பாத்திரங்களின் நற்குணங்களையும், அவர்கள் வாழ்வின் பெருமைகளையும் போதிப்பதே எதிர்காலச் சமுதாயத்திற்குரிய நல்வித்தை உருவாக்க முடியும் என்ற சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களை முன்வைக்கிறார் பாரதியார். அது மட்டுமல்லாது, பிற மொழிகளின் புராணக்கதைகளையும் இணைத்துக் கற்பித்தல் மேலும் நன்மை பயக்கும் என்கிறார். நாளைய சமுதாயத்தை உருவாக்க பாரதியின் முன்னோக்கிய சிந்தனை ஏற்புடையதாக அமைந்துள்ளது.

**சமத்துவக் கல்வி**

மாணவர்களுக்கு உலகமே கடவுள் என்னும் மாயை மயமாக்கப்பட்டிருக்கும் உண்மை நிலையினை உணர்த்துவது கட்டாயமானது. நீதி, நேர்மை, உண்மை என்னும் நற்பண்புகளுக்குச் சொந்தக்காரர்களாக மாணவச் சமுதாயம் உருவாக்கப்பட வேண்டும். எதிர்காலச் சமுதாயம் சாதி, சமயமற்ற ஒற்றுமைச் சமுதாயமாக வலம்வர சமய நல்லிணக்க சமத்துவக் கல்வி அவசியம் என்பதை உறுதிப்படுத்துகின்றார். சமய நல்லிணக்கம் பற்றிய பாடங்கள் நீதிக் கதைகளுடன் புகட்டுவது மிகவும்

இன்றியமையாதது. சமயசாதிப் பேதங்கள் இல்லாமல் மாணவர்கள் நற்குணங்களுடன் இருப்பதற்கு வழிகள் ஏற்படும் என்பதை,“**தேசீய பள்ளிக்கூட மாணவர்களுக்கு உபாத்தியாயர் தத்தம் இஷ்ட தெய்வங்களிடம் பரம பக்தி செலுத்தி வழிபாடு செய்து வர வேண்டும் என்று கற்பிப்பதுடன். இதர தெய்வங்களைப் பழித்தல், பகைத்தல் என்ற மூடச் செயல்களைக் கட்டோடி விட்டுவிடும்படி போதிக்க வேண்டும். கடவுள் ஒருவரே. அவரை ரிஷிகள் பல பெயர்களால் அழைக்கின்றனர் என்ற ரிக் வேத உண்மையை மாணாக்கரின் உள்ளத்தில் ஆழப்பதியுமாறு செய்ய வேண்டும். உலகம் முழுவதும் கடவுளின் வடிவமே என்று இந்து மதம் போதிக்கிறது. இங்ஙனம் எல்லாம் கடவுள் மயம் என்றுணர்ந்தவன் உலகத்தில் எதற்கும் பயப்படமாட்டான். எங்கும் உண்மை, நேர்மை, விரயம், பக்தி முதலிய வேத ரிஷிகளின் குணங்களையும், ஸ்வஜனாபிமானம், ஸ்வஜீவதயை முதலிய புராண வீரர்களின் குணங்களையும் பிள்ளைகளுக்கு நன்றாக உணர்த்த வேண்டும்”** (பாரதியார் கட்டுரைகள், 2004:387-388)இவ்வரிகளில் ‘தெய்வம் ஒன்றே’ என்பதை மாணவர்களுக்கு பதிவாக்குவதற்கு சமயத்தைக் குறித்த நல்ல கருத்துக்கள் கற்பிக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார்.

**பெண் கல்வி**

பெண் என்பவள் நற்பண்பின் விளைநிலம். அந்நிலத்தின் தன்மைக்கேற்ற பயிரே அங்கு விளையும். உரிமை பெற்ற, அறிவு செறிந்த, மாண்பு கொண்ட பெண்ணினமே சிறந்த மக்களைச் சான்றோர்களைச் சீலர்களைப் பெற்று வளர்த்து வழங்க இயலும். கல்வி கற்ற தாய்மார்களே குழந்தைகளின் கல்விக்கு உறுதுணையாக இருக்க முடியும். கல்வியிற் சிறந்த ஆணும், பெண்ணும் இணைந்த குடும்பத்தில் பொருளாதார நிலை சிறந்திருக்கும். ஏழ்மைக் குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்குக் கல்வி பெறும் வாய்ப்பு பெரிதும் கிடைப்பதில்லை. கல்விச் செல்வம் குறைந்த பெண்கள் தங்களது குழந்தைகளுக்குச் சிறந்த கல்வி பெற உதவ இயலாது. எனவேதான் பாரதி பெண் கல்வியின் தேவையை வற்புறுத்துகிறார் என்பதை, “**தமிழ் நாட்டின் சகோதரிகளே, உங்களிடம் எத்தனையோ அரிய திறமைகளும் தந்திரங்களும் உயர்ந்து இருந்த போதிலும் கல்வியின் பரவுதல் அதிகமாக இல்லாத படியால் அவ்வப்போது வெளியுலகத்தில் நிகழும் செய்திகளையும் மாறுதல்களையும் அறிந்து கொண்டு அதற்குத் தக்கபடி நடக்க இயலாமல் போகிறது”** (பாரதியார் கட்டுரைகள், 2004:185)என்ற வரிகளில் தகுதியும் திறமையும் கொண்ட தமிழ்நாட்டுப் பெண்கள் வெளியுலகை அறியவும், தன் பிள்ளைகளை நற்பண்புள்ளவர்களாக வளர்க்கவும், சமுதாயத்திற்கேற்ற நல் வித்தை உருவாக்கும் பொறுப்பும் பெண்களிடமுள்ளது. அப்பெண்கள் கல்வியறிவில் சிறந்திருப்பதே தனக்கும் தன் குழந்தைக்கும், சமுதாயத்திற்கும் மிகப்பெரும் நன்மை பயக்குமென்பதை பாரதியார் சுட்டிக்காட்டுகின்றார்.

**தாய்மொழிக் கல்வி**

ஆங்கிலக் கல்விக்கூடங்களில் கற்பிக்கப் பெறும் கல்வி இந்திய நாட்டின் இயல்புக்கு ஒத்ததாக இல்லை என்பது பாரதியார் கருத்து. இதனை,

**கணிதம் பன்னிரண்டாண்டு பயில்வர், பின்**
**கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்;**
**அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்**
**ஆழ்ந்திருக்கும் கவியுளம் காண்கிலார்;**
**வணிகமும் பொருள்நூலும் பிதற்றுவார்;**
**வாழுநாட்டிற் பொருள்கெடல் கேட்டிலார்**..(சுயசரிதை - 23)

எனக் கற்கும் கல்வியின் பொருள் இன்னது எனத் தெரியாது அயல்மொழி என்ற மோகத்தில் சிக்கி நாட்டினர் உழல்வதை அவர் இந்தப் பகுதியில் எடுத்துக் காட்டுகின்றார். கம்பன், காளிதாசன், திருவள்ளுவர் போன்ற உள்நாட்டுக் கவிஞர்கள்; பாஸ்கரன், பாணினி போன்ற மேதைகள்; அசோகன், சிவாஜி மற்றும் சேர, சோழ, பாண்டியர் போன்ற மன்னர்கள் ஆகியோரைப் பற்றி யாதும் அறிந்து கொள்ள மாட்டார்கள். ஆங்கிலப் பயிற்சி பெறும் மாணவர்கள்;

”**முன்ன நாடு திகழ்ந்த பெருமையும்**
**மூண்டிருக்கும் இந்நாளில் இகழ்ச்சியும்**
**பின்னர் நாடுறு பெற்றியும் தேர்கிலார்**
**பேடிக்கல்வி பயின்றுழல் பித்தர்கள்;**
**என்ன கூறி மற்று எங்ஙன் உணர்த்துவேன்**
**இங்கு இவர்க்கு எனது உள்ளம் எரிவதே”** (சுயசரிதை: 26)என்று ஆங்கில மோகம் கொண்டோரை நினைக்கையில் தன் உள்ளம் எரிவதை உணர்த்துகிறார் பாரதியார். இப்படிக் கூறுவதால் ஆங்கில மொழிக்கு எதிரானவர் பாரதி என்று பொருள் கொள்ள வேண்டாம். கல்வியைத் தாய் மொழியில் பயிலும்

போது சிந்தனைத் தெளிவு உண்டாகும்; புதியன படைக்கத் தோன்றும். புரியாத, அதிலும் நம்மை அடிமைப்படுத்திய ஆங்கிலேயரின் மொழியை இந்த மண்ணுக்குப் பயன்தராத வகையில் கற்பதால் பயனேதுமில்லை என்பதாலேயே பாரதி தவிப்பும் எரிச்சலும் அடைகிறார். எனவே, மக்கள் அனைவரும் எளிதாகக் கல்வி பயில ஏதுவாகும் என்று இன்றைய நிலையில் பின்பற்றப்படும் தாய்மொழிக் கல்வியைப் பாரதி அன்றே உணர்ந்து விரிவாகக் கூறியுள்ளார். இதனை,"**தமிழ் நாட்டில் தேசிய கல்வியென்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ் பாஷையை ப்ரதானமாக நாட்டாமல் பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒருவித உபபாஷையாகவும் ஏற்படுத்தினால் அது தேசீயம் என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாக முடியுமென்பதில் ஐயமில்லை. தேச பாஷையே ப்ரதானமென்பது தேசிய கல்வியின் ஆதாரக் கொள்கை. இதை மறந்துவிடக்கூடாது… இந்த முயற்சிக்குத் தமிழ் பாஷையே முதற்கருவியாக ஏற்படுத்தப்படுமென்பதை, தம்பட்டம் அறைவிக்க வேண்டும். இங்ஙனம் தமிழ் பாஷையே ப்ரதானமென்று நான் சொல்வதால்… ஆர்ய பாஷா விரோதம் கொண்டு பேசுகிறேன் என்று நினைந்து விடலாகாது. தமிழ் நாட்டிலே தமிழ் சிறந்திடுக. பாரத தேச முழுதிலும் எப்போதும் போலவே வடமொழி வாழ்க. இன்னும் நாம் பாரத தேசத்தின் ஐக்யத்தை பரிபூரணமாகச் செய்யுமாறு நாடு முழுவதிலும் வடமொழிப் பயிற்சி மென்மேலும் ஓங்குக. எனினும் தமிழ்நாட்டில் தமிழ் மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக"** (கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், 9 : 2008 : 516) இவ்வரிகளின் மூலம், தமிழ்நாட்டில் தமிழ்மொழி பேசுவதும் தாய்மொழிக் கல்வியாக தமிழ் உருவாக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தையும் பாரதியார் வெளிப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும்,"**பொறியியல் மருத்துவம் போன்ற பாடங்களில் ஆங்கிலத்துக்கு இணையான தமிழ்ச் சொற்கள் இல்லையென்று கருதுவதால் இன்னமும் தமிழ் மொழி முதல் மொழியாக இயங்கப்படுதல் இல்லை. பெற்றோர்களின் ஆங்கில மோகத்தினால் குழந்தைகளின் ஆரம்பக் கல்வியே ஆங்கிலத்தில் அமைந்து பிஞ்சுக் குழந்தைகளின் மனதில் பதிகிறது. நிலா நிலா வா வா, நில்லாமல் ஓடி வா என்னும் தித்திக்கும் இனிய பாட்டு மறந்துவிட்டது. நிலவைக் காட்டி அன்னமூட்டுவதும் மறைந்து, தொலைக்காட்சியைக் காண்பித்து அன்னமூட்டுதல் இன்றைக்கு வழக்கமாகி வருகிறது. தமிழ்ப் பெயர்கள் ஆயிரமாயிரம் இருப்பினும் அங்கும் இங்குமொன்றாகவே தமிழ்ப் பெயர்கள் காதில் விழுகின்றன. தமிழாசிரியர்களும் ஆங்கிலம் கலந்த மொழியே பேசுகிறார்கள். எனில் தூய தமிழ் எங்ஙனம் வளரும்? மறைமலையடிகள் போன்ற ஆயிரம் தமிழ்ப் பாவலர்கள் தோன்றித் தூயதமிழ் வளர்க்க வேண்டும்"** (டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதன், பாரதி என்றொரு மானுடன், பக். 89-90).என்பன போன்ற கருத்துக்கள் தமிழ் நாட்டில் தமிழ் மொழிக் கல்வியே நிலைபெற, தமிழர் அனைவரும் ஒன்றிணைந்து தூயத் தமிழை வளர்த்து பொறுப்புள்ளவர்களாக மாற வேண்டும் என்ற உண்மை நிலையினை உறுதிப்படுத்துகின்றது.

**அரசியல் கல்வி**

பள்ளி மாணவர்களுக்கு அரசியல் கல்வி தேவை என்பது பாரதியின் கருத்து. அரசின் செயல்பாடுகள் பற்றிய பாடங்கள் பாட நூலில் இடம் பெறவேண்டும் என்று பாரதி கூறியுள்ளதை, "**ஜனங்களுக்குள்ளே மைதானத்தைப் பாதுகாப்பதுவும், வெளிநாடுகளிலிருந்து படை எடுத்து வருவோரைத் தடுப்பதுவும் மாத்திரமே ராஜாங்கத்தின் காரியங்கள் என்று நினைத்துவிடக் கூடாது. ஜனங்களுக்குள்ளே செல்வமும், உணவு, வானம் முதலிய ஸௌகரியங்களும், கல்வியும், தெய்வ பக்தியும், ஆரோக்கியமும் நல்லொழுக்கமும், பொது சந்தோஷமும் மேன்மேலும் விருத்தியடையவதற்குரிய உபாயங்கள் இடைவிடாமல் அனுஷ்டித்துக் கொண்டிருப்பதே ராஜாங்கத்தின் கடமையாவது, கிராம பரிபாலனம், கிராம சக்தி, வைத்தியம் முதலியவற்றில் குடிகளனைவரும் மிகுந்த சிரத்தை நாட்ட வேண்டுமாதலால் மாணாக்கர்களுக்கு இதன் விவரங்களை நன்றாக போதிக்கப்பட வேண்டும்"** (பாரதியார் கட்டுரைகள், 2004 : 388-389).என்ற பாரதியின் வரிகளில் அரிய பெரும் கருத்துக்கள் நிறைந்துள்ளன. இவை எதிர்கால அறிஞர்களாக வரவிருக்கும் மாணவர்கள் மட்டுமல்லாமல் எல்லா குடிமக்களும் அறிய வேண்டிய கருத்துக்கள் என்பதை மறுக்க இயலாது. மேலும், இன்றைய அரசியலில் நமது நாட்டின் எல்லையைக் காப்பது மிகவும் முக்கியமான பொறுப்பாக உள்ளது. நாட்டில் நல்லாட்சி மலர்ந்து குடிமக்கள் எல்லா நன்மைகளும் அடைந்து வெகு மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்ற பாரதியின் வலியுறுத்தலுக்குச் சான்றாக,

"**குடிகள் ராஜாங்கத்தைத் தம்முடைய நன்மைக்காகவே, சமைக்கப்பட்ட கருவியென்று நன்றாகத் தெரிந்துகொள்ள வேண்டும். குடிகளுடைய இஷ்டப்படியே ராஜ்யம் நடத்தப்பட வேண்டும். தீர்வை விதித்தல், தீர்வைப் பணத்தைப் பல துறைகளிலே விநியோகித்தல், புதுச் சட்டங்கள் அமைத்தல், பழைய சட்டங்கள் அழித்தல் முதலிய ராஜாங்க காரியங்கள் எல்லாம் குடிகளால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகளின் இஷ்டப்படியே நடத்த வேண்டும். குடிகளின் நன்மைக்காகவே அரசு ஏற்பட்டிருப்பதால் அந்த அரசியலைச் சீர்திருத்தும் விஷயத்தில் குடிகளெல்லாரும் தத்தமக்கு இஷ்டமான அபிப்ராயங்களை வெளியிடும் உரிமைகள் இவர்களுக்கு உண்டு… ராஜாங்கங்கள் எவ்வளவு தூரம் மேற்கண்ட**

**கடமைகளைச் செலுத்தி வருகின்றன என்பதையும் (மாணக்கருக்கு) எடுத்துரைக்க வேண்டும். கோயிற் பரிபாலனமும் அங்ஙனமே. ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுப்பதுவும், தொழில் ஏற்படுத்திக் கொடுத்து உணவு தருவதுவும் ராஜாங்கத்தாரின் கடமை"** (பாரதியார் கட்டுரைகள், 2004 : 389) என்ற வரிகளில் மாணவர்களுக்கு, நாட்டை ஆள்பவர்களுக்குரிய கடமை எதுவென்பதையும், குடிமக்களுக்குரிய கடமைகள், உரிமைகள் எவை என்பதையும் கற்றுக்கொடுத்தலே எதிர்காலச் சமுதாயத்தில் நல்லாட்சி மலர வாய்ப்பாக அமையும் என்றுரைத்த பாரதியின் கருத்து இச்சமுதாயம் சீர்பெருவதற்குரிய வழிகாட்டியாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**பொருளாதாரக் கல்வி**

உலகம் வியக்கும் உன்னதமான நாடு என்றால், அது பொருளாதாரத்தில் மிகச்சிறந்த நாடாக இருக்க வேண்டும். செல்வச் செழிப்பு, செல்வச் செருக்குடன் வாழும் நாடெனில் மற்ற நாடுகள் அதற்குப் பணிந்தே இருப்பது இயல்பு. பொருளாதார வளர்ச்சியில் சிறப்பு அடையவேண்டுமானால் நேர்மையான அரசியல், திறமையான வணிகம், மக்களுக்கு வேண்டிய முக்கிய பொருட்கள் சீராக வினியோகித்தல் இவைகள் யாவும் இன்றியமையாதன. இதனை அன்றே உணர்ந்து சொல்லிய பாரதியின் பெருமையை உணரலாம். இதனை,

**"ஆரம்பக் கருத்துக்களை மாணாக்கர்களுக்குப் போதிக்குமிடையே தீர்வை விஷயத்தை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ஜனங்களிடம்... குறைவாக வாங்கும் நிலையிலிருந்து பொது நன்மைக்குரிய காரியங்கள்... மிகுதியாக நடைபெறுகின்றனவோ... அந்த ராஜாங்கம் நீடித்து நிற்கும். அந்த ஜனங்கள் ஷேமமாக வாழ்ந்திருப்பார்கள். விளை பொருளும், செப்பொருளும் மிஞ்சிக் கிடக்கும் தேசத்தில் விலைக்கு வாங்கி அதை வேண்டியிருக்கும் இடத்தில் கொண்டு போய் விற்க வேண்டும் என்பதை வியாபாரத்தில் பிரமாணமான கொள்கையாகும். வியாபாரத்தில் கூட்டு வியாபாரம் எங்ஙனம் சிறந்ததோ அது போலவே கைத் தொழிலும் கூட்டுத் தொழிலே சிறப்பு வாய்ந்ததாகும். முதலாளி ஒருவன் கீழே பல தொழிலாளர்கள் கூடி நடத்தும் தொழிலைக் காட்டிலும் தொழிலாளர்கள் பலர் கூடிச் செய்யும் தொழிலே அதிக நன்மையைத் தருவதாகும்... சாத்தியப்பட்டவரை அநேகரிடம் பொருள் பரவியிருக்கும்படி செய்யும் வியாபார முறைகள் மேன்மையாகப் பாராட்டத் தக்கனவாம்"** (பாரதியார் கட்டுரைகள் : 2004 : 390)இக்கருத்தில், நாட்டின் பொருளாதாரம் மேன்மையடைவதற்குரிய நேர்மையான தீர்வை (வரி) வழிகளையும், வியாபாரத்தின் நுணுக்கங்களையும் மாணவர்களுக்கு கற்றுக்கொடுப்பதே நாட்டின் பொருளாதாரம் சீர்பெருவதற்குரிய வழிகளாக அமையும். சமுதாயம் மேன்மையடைய பொருளாதாரம் மிக அவசியம் என்ற பாரதியின் கருத்தை மாணவர்களின் மனதில் பதிவாக்குதலே நன்மை பயக்கும் என்பதில் ஐயமில்லை.

**முடிவுரை**

பாரதியார் தாம் வாழ்ந்த காலத்திலேயே ஆங்கிலக் கல்வியின் பயனற்ற தன்மையைக் கண்டு நமது நாட்டின் தன்மைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ற புதிய தேசிய கல்வித் திட்டத்தை வகுத்துத் தருகிறார். அதற்கான பயிற்று மொழியாகத் (கற்றல் மொழி) தாய்மொழியான தமிழை வைத்துப் பாடத் திட்டத்தை அமைத்துக் கொடுக்கிறார். தேசியக் கல்வியோடு ஒவ்வொருவரும் தாய்மொழிக் கல்வியிலும் சிறந்து விளங்க வேண்டும் என்று கூறுகிறார். அப்பாடத்திட்டத்தில் எழுத்து, படிப்பு, கணக்கு, சமூக வரலாறு, புவி இயல், சமய இயல், அரசியல், பொருளியல், அறிவியல் ஆகியவற்றோடு விவசாயம், தோட்டப் பயிற்சி, வியாபாரம், உடற்பயிற்சிக் கல்வி, விளையாட்டுக்கல்வி, பயணக்கல்வி முதலியனவும் இடம்பெறுகின்றன. இவற்றுள் தொழிற்கல்வியின் தேவையினை வற்புறுத்துகிறார். மாணவன் பள்ளிப் படிப்பு முடிந்ததும் தன் சொந்தக் காலில் நிற்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, தன்னம்பிக்கை உணர்வை ஊட்ட வேண்டுமென்கிறார். மாணவர்களின் மனதைப் பண்படுத்தி, நல்விதையான பாரதியாரின் சீர்திருத்தக் கருத்துக்களின் விதைகளைத் தூவுவதன் மூலம் எதிர்காலச் சமுதாயம் நற்சமுதாயமாகப் பூத்துக்குலுங்கும். விதைப்பின் நற்பலன்களை நாம் அறுவடையாக்குவோம். மாணவர்களைப் பண்படுத்துவோம். பலன் பெறுவோம்.

**துணை நின்ற நூல்கள்**


1. பாரதியார் கட்டுரைகள், கவிதா வெளியீடு,சென்னை – 600 007,பதிப்பு – 2007.
2. விசுவநாதன் சீனி, காலவரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், சி.ஐ.டி. நகர், சென்னை-600 035, முதற்பதிப்பு - டிசம்பர் 2006.
3. டாக்டர் ஜே.ஜி. சண்முகநாதன், பாரதி என்றொரு மானுடன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., அம்பத்தூர், சென்னை – 600 098, முதற்பதிப்பு : 2014.